TIP SHEET 5

# ஆர்ப்பாட்டங்கள், மக்கள் அமைதியற்ற சூழல்களை அறிக்கையிடல்

## புகைப்பட ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிமுறைகள்

Internews
Local voices. Global change.

புகைப்பட ஊடகவியல் என்பது ஒரு தனித்துவமான வேலை நிலைமைகளின் தொகுதியைக் கொண்டது. நீங்கள் பதிவுசெய்யவுள்ள சம்பவத்திற்கு அருகில் நீங்கள் இருக்கவேண்டும் என்பதோடு, உங்களது உபகரணம் மற்றும் சொந்த பாதுகாப்பு குறித்தும் அவதானம் செலுத்த வேண்டும். இலக்கை கண்டறிய பயனருக்கு உதவும் ஒளியியல் சாதனத்தின் (Viewfinder) மூலம் நீங்கள் எதனை பதிவுசெய்ய முயற்சிக்கின்றீர்கள் என்பதில், உங்கள் முழுமையான கவனம் சென்றுவிட முடியும் என்பதையும் கருத்திற்கொள்க. இந்த சூழ்நிலையானது, உங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களில் இருந்து உங்கள் கவனத்தைத் திசைதிருப்பிவிடும்.

## தயார்படுத்தல்

சம்பவத்தைப் பதிவுசெய்ய ஆரம்பிக்க முன்னர், ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம், வீதிகள், போக்குவரத்து, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்கும் தரப்பினர் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் பொதுவான சூழல் ஆகியன தொடர்பாக நன்கு புரிந்துகொள்ளவும்.

சக பணியாளர்களுடன் உரையாடுங்கள், குறிப்பாக ஆர்ப்பாட்டங்களை நேரில் சென்று அறிக்கையிட்டவர்களுடன் உரையாடுங்கள். சமூக ஊடகங்கள் மற்றும் செய்திப் பரிமாற்றக் குழுக்களை அவதானித்து, தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

உணர்திறன்வாய்ந்த உபகரணங்களை நீங்கள் பயன்படுத்துவதாயின், வானிலை பற்றி தெரிந்திருப்பதும் பயனுள்ளதாக அமையும்.

அறிக்கையிடலுக்கு நீங்கள் பயன்படுத்தும் உபகரணங்கள், அவற்றை எவ்வாறு கொண்டுசெல்வீர்கள் மற்றும் அவற்றிற்கான காப்புறுதி தொடர்பான தெளிவான திட்டத்தை வைத்திருங்கள். முடியுமானவரை குறைந்தளவான பொருட்களுடன் செல்லுங்கள்.

சக பணியாளர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுடன் ஒரு வலுவான தொடர்புகொள்ளும் திட்டத்தை உருவாக்கி, அதனை செயற்படுத்துங்கள். அதனை நடைமுறைப்படுத்திப் பரீசித்துப் பாருங்கள்.

அறிக்கையிடல் மற்றும் நீங்கள் எதிர்பார்க்கும் புகைப்படம் தொடர்பாக தெளிவான சிந்தனையைக் கொண்டிருங்கள்.

## களத்தில்/ அறிக்கையிடலின் போது

ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்திற்கு நேர காலத்தோடு செல்லவும், வேலை மற்றும் அந்த இடம் தொடர்பான சூழ்நிலையுடன் பழகிக்கொள்வதற்கு சிறிது நேரத்தை ஒதுக்குங்கள். சனக்கூட்டம் அதிகமாகி, பதற்ற சூழல் ஏற்படுவதற்கு முன்னராக ஆர்ப்பாட்டக் களத்திற்குச் செல்வது சிறந்தது.

பாதுகாப்புத் தரப்பினர் மற்றும் ஆர்ப்பாட்டக்காரரர்கள் எந்த இடத்தில் நிலைகொண்டுள்ளனர் என்பதை மிகத்தெளிவாக அறிந்திருங்கள். இதன்மூலம் நீங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழுக்களிடையே சிக்கிக்கொள்ளாமல் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

நீங்கள் ஆவணப்படுத்தும் நபரின் தனியுரிமையை மதிக்கவும். ஆர்ப்பாட்டங்களின் சூழ்நிலை விரைவாக மாறக்கூடியது என்பதை எப்போதும் கருத்திற்கொள்ளவும்.

உங்களது பாதுகாப்பிற்கு பாரிய அச்சுறுத்தலாக அமையாதவிடத்து, உங்களை அடையாளப்படுத்தும் தொழில்சார் அடையாள அட்டைகளை தெளிவாகத் தெரியும் விதமாக அணிந்துகொள்ளுங்கள். நீங்கள் எதற்காக அந்த இடத்தில் இருக்கின்றீர்கள் என்பதில் சந்தேகம் ஏற்படாத விதமாக நடந்துகொள்ளவும்.

அங்கிருந்து உடனடியாக வெளியேறுவதற்கான திட்டத்தை வைத்திருக்கவும்.

வேலைக்கான தேவைகள், உங்களை சுற்றியுள்ள பொதுவான சூழ்நிலைகளில் இருந்து உங்கள் கவனத்தை திசைதிருப்பக்கூடும் என்பதையும் நினைவிற்கொள்ளவும்.

முடிந்தளவு, உங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய நம்பகமான சக பணியாளர்கள் அடங்கிய குழுவுடன் இணைந்து அல்லது அவர்களுள் ஒருவராக இணைந்து பணியாற்றுங்கள்.

உங்களது சுய பாதுகாப்பை ஒருபோதும் குறைமதிப்பிற்கு உட்படுத்த வேண்டாம்.

தற்போது அங்கு காணப்படும் பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் அவற்றை சமாளிப்பதற்கு உங்களிடம் உள்ள திட்டங்கள் பற்றி தெளிவாக அறிந்து வைத்திருங்கள்.

காட்சிகளை ஆவணப்படுத்துபவர்கள் என்ற ரீதியில், தொலைதூரத்தில் இருந்து பணிபுரிவதானது உங்களுக்கான ஒரு தெரிவாக அமையாது. பயணத்தின்போது, எந்த நேரமும் உங்கள் பாதுகாப்பு நிலைமையை தொடர்ச்சியாக மதிப்பிடுவதற்கு உதவக்கூடிய திறன்களை நீங்கள் கட்டியெழுப்பிக்கொள்ள வேண்டும்.

Developed by Amantha Perera for Internews
www.internews.org | Contact Us: LK-Info@internews.org